1982 மார்ச் 4]

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக திருப்பணிகள் நடக்கக்கூடிய இடத்திலே அதன் பெயரால் தொல்பொருளாக இருக்கிற சிலைகள் அதனுடைய ஒரிஜினாலிட்டியை இழக்கக்கூடிய அளவிற்கு சில மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பணிகள் என்பது கோபுரங்கள் அல்லது மற்றக் கட்டடங்களைப் பொறுத்துதான் வருகின்றன. கோபுரங்களிலே உள்ள இந்த சிலைகள் அல்லது பொம்மைகள் முதலியவை முறையாக ஸ்தபதிகளினாலே அல்லது அதைப்பற்றி கற்று அறிந்தவர்களாலேதான் மீண்டும் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 345—திரு. பெ. சு. திருவேங்கடம் மற்றும் திரு. செ. சிவசாமி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மேற்கு பகுதி பயன்பெறும் வகையில் நீலகிரி T.V. அஞ்சல் நிலையம் அமைக்க வேண்டுமென மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இன்றையதினம் டி.வி. பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தெற்கு பக்கத்திலே கொடைக்கானலிலே கோபுரம் அமைக்கிற போது தெற்கு மாவட்டங்கள் பயன் பெறும் என்று சொன்னார்கள். இப்போது சிலோன் டி.வி. யிலே தெற்கு மாவட்டங்களிலே பார்க்கக்கூடிய ஒரு வசதி ஏற்பட்டிருக்கிறது. கோவை, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களிலேதான் இந்த டி.வி. பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்காக அந்தப் பக்கத்திலே ஒரு கோபுரம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசிடத்திலே மாநில அரசு தெரிவித்த கருத்துக்களையொட்டித்தான் கொடைக்கானலிலே தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையத்தை ஏற்படுத்த விருக்கிறார்கள். கொடைக்கானலிலே ஒளிபரப்பு நிலையம் அமைத்ததற்குப் பிறகு மதுரை, பெரியார், திருச்சி, கோவை ஆகிய மாவட்டங்கள் முழுமையாகவும், இராமநாதபுரம் மாவட்டம் 95 சதவீதத்திற்கும், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளும் பயனடையும் என்று தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக உதகமண்டலம் இதனாலே பயன்பெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். முதல் முயற்சி வெற்றி பெற்றதற்கு பிறகு இரண்டாவது கட்டத்தைப்பற்றி மாநில அரசு கேட்பது பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையிலே ஒளிபரப்பப்படுகிற அந்த நிகழ்ச்சிகளை வட ஆற்காடு, தர்மபுரி போன்ற மாவட்டங்களிலே பார்க்க முடியவில்லை. ஏலகிரி மலையிலே மாநில அரசினுடைய செலவிலாவது சிறிய கோபுரம் அமைத்து அந்த மக்களுக்கு வசதி ஏற்படுத்த அமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பற்றி நமக்கு விவரம் தெரியவில்லை. அப்படிக் குறைந்த செலவிலே ஒளிபரப்பு நிலையங்களை அமைக்க முடியுமா என்பதைப்பற்றி ஒளிக்காட்சி நிலையத்தோடு தொடர்பு கொண்டு அதைப்பற்றி கருத்துக்களை பின்னாலே பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, தற்போது டி.வி. வரும் என்று மதுரையிலும், இராமநாதபுரத்திலும், பரமக்குடியிலும், தூத்துக்குடியிலும் எங்கு பார்த்தாலும் ஆன்டனா இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே இன்னும் டி.வி. காட்சிகள் ஒளிபரப்பும் நிலை வரவில்லை. கொடைக்கானலில் டி.வி. நிலையம் ஆரம்பிப்பதற்காக ஒரு ஆண்டுக்குள் நில ஆர்ஜிதம் எல்லாம் செய்யப்பட்டு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. அது இன்று என்ன நிலையில் உள்ளது? கொடைக்கானலில் ஆரம்பிக்கப்படும் டி.வி. ஸ்டேஷனை சீக்கிரமாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, கொடைக்கானலில் நில ஆர்ஜிதம் செய்வதில் சில தடைகள் இருந்தன. அந்தத் தடைகள் எல்லாம் கடந்து 3, 4 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நாம் மத்திய அரசினிடத்திலே ஒப்படைத்து விட்டோம். மத்திய அரசு ஒளிபரப்புத் துறையினர் உடனடியாக வேலைகள் தொடங்குவதற்காக டெண்டர்கள் முதலியன விட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எப்படியும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் முடிந்துவிடும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே 5 சதவிதம் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்தப் பகுதி ? ராஜபாளையம் பகுதியா ? திருப்பத்தூர் பகுதியா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்த ஒளி பரப்பு நிலையம் வந்ததற்குப் பிறகு அந்த 5 சதவீதம் பகுதிகளுக்குகூட தெரிகின்ற நிலைமை ஏற்படலாம். ஏனென்றால் பொறியியல் நிபுணர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் சொல்வார்கள். ஆகவே எந்தப் பகுதியிலே தெரியவில்லை என்பதைப்பற்றி இப்போதே சொல்லி அந்தப் பகுதி மக்களுக்கு வீணாக ஒரு ஆர்வத்தை உண்டாக்குவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடுதுறையிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கான நிதி உதவி.

* வினா எண் 346—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள நெல் பற்றிய ஆராய்ச்சி நடத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திடம் நிதி உதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு ஆடுதுறை நெல் பரிசோதனை நிலையத்தின் அபிவிருத்திக்கென ரூபாய் 60 இலட்சங்களை அளிக்க இருக்கிறது.